

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 23 பயனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000/- பெறுவதற்கான ஆணைகளை, மாவட்ட ஆட்சியர் அலுவலக லூரி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (29.08.2016) வழங்கினார்.
மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 579/2016 நாள்: 29.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், 23 பயனாளிகளுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000/- பெறுவதற்கான ஆணைகளை இன்று (29.08.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (29.08.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், 4 பயனாளிகளுக்கு இந்திராகாந்தி தேசிய முதியோர் உதவித்தொகையும், 11 பயனாளிகளுக்கு ஊனமுற்றோர் முதியோர் உதவித்தொகையும், 7 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகையும், ஒரு பயனாளிக்கு முதிர்கன்னியர் உதவித்தொகையும் என மொத்தம் 23 பயனாளிகளுக்கு மாதந்தோறும் தலா ரூ.1,000/- பெறுவதற்கான ஆணைகளை, மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.08.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.